குழந்தைகள் பாதுகாப்புக்கான கட்டுப்பாட்டு அறையில் ஆய்வு

குழந்தைகள் பாதுகாப்புக்கான கட்டுப்பாட்டு அறையில் ஆய்வு மேற்கொண்ட நாமக்கல் ஆட்சியர் ஸ்ரேயா பி.சிங்.

நாமக்கல், ஜன. 4: நாமக்கல்-திருச்சி சாலை நேதாஜி நகரில் செயல்பட்டு வரும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், குழந்தை தொழிலாளர்கள் தொடர்பான புகார்களை தெரிவிப்பதற்கான குழந்தைகள் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் ஸ்ரேயா பி.சிங் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

அப்போது, குழந்தைகள் உதவி எண் 1098-க்கு புகாராக வந்த குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர், குழந்தை பாலியல் துன்புறுத்தல், பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் மற்றும் மனரீதியான ஆலோசனைகள் போன்ற அழைப்புகளின் விவரங்களை பார்வையிட்டார்.

குழந்தைகள் திருமண நடைபெறுவதற்கு உறுதுணையாக இருப்போர் மீது போலீஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சிறை தண்டணை, அபராதம் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறான குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கவே கட்டுப்பாட்டு அறையானது அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பணியாற்றுவோர் தங்களின் பணியின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு 1098-க்கு வரும் அழைப்புகளை, உரிய விவரங்களை நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட கோட்டாட்சியர், வட்டாட்சியர், காவல்துறை அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என ஆட்சியர் அறுவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, சைல்டு லைன் இயக்குநர் சிவகாமிவள்ளி, திட்ட ஒருங்கிணைப்பாளர் மேகநாதன் உள்பட குழந்தைகளின் கட்டுப்பாட்டு அறை அலுவலக ஊழியர்கள் உடனிருந்தனர்.

பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கல்

நரசிங்கபுரம் நகராட்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கும் பணியைத் தொடங்கி வைத்த நகரச் செயலாளர் என்.பி.வேல்முருகன். உடன் துணை செயலாளர் எஸ்.மனோகரன் உள்ளிட்டோர்.

ஆத்தூர், ஜன. 4: ஆத்தூர் மற்றும் நரசிங்கபுரம் நகராட்சி பகுதிகளில் பொங்கல் தொகுப்புகள் திமுக நகரச் செயலாளர்கள் தலைமையில் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

சேலம் மாவட்டம் ஆத்தூர் நகராட்சி பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளில் பொங்கல் தொகுப்புகள் ஆத்தூர் திமுக நகரச் செயலாளர் கே.பாலசுப்ரமணியம் தலைமையில் வழங்கப்பட்டன. இதில் கட்சியின் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் முல்லை பன்னீர்செல்வம், இணைச் செயலாளர் ஜெ.காசியம்மாள், பொருளாளர் ஜி.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதி மாணிக்கம், முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் வி.ராஜாமணி, அ.கமால்பாஷா, எம்.வேலுமணி, சரவணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.பர்கத்அலி, பிஆர்எஸ்.பாண்டியன், ரவிச்சந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதே போல் நரசிங்கபுரம் நகராட்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நகரச் செயலாளர் என்.பி.வேல்முருகன் தலைமையில் வழங்கப்பட்டது. அவருடன் துணைச் செயலாளர் எஸ்.மனோகரன், பொருளாளர் ரமேஷ், முன்னாள் நகர மன்றத் தலைவர் காட்டுராஜா(எ)எம்.பழனிசாமி, பிரகாஷ், மனோகரன், முன்னாள் நகரமன்ற உறுப்பினர்கள் செல்வம், தியாகராஜன், ராமசாமி, அலெக்ஸ், இளைஞரணி அமைப்பாளர் ஜே.பி.அரவிந்த் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கெங்கவல்லி வட்டத்தில்...

தம்மம்பட்டி பேரூராட்சி பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகளில் மளிகைப் பொருள்கள், செங்கரும்பு உள்ளிட்ட 21 பொருள்கள் கொண்ட பரிசுத் தொகுப்பை பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் வி.பி.ஆர்.ராஜா வழங்கி தொடக்கி வைத்தார்.

இதேபோல செந்தாரப்பட்டி பேரூராட்சியில் அட்மா குழுத் தலைவர் ஏ.கே.அகிலன், நகர திமுக செயலாளர் முருகேசன் ஆகியோரும், கெங்கவல்லியில் நகர திமுக பொறுப்பாளர் சு.பாலமுருகனும் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கி தொடக்கி வைத்தனர். கெங்கவல்லி ஒன்றியத்திலுள்ள 14 ஊராட்சிகளிலும் திமுக நிர்வாகிகள் முன்னிலையில் பொங்கல் பரிசுத் தொகுப்புகள் வழங்கப்பட்டன.

மேச்சேரி ஒன்றியத்தில்...

மல்லிகுந்தத்தில் உள்ள மல்லிகுந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க நியாய விலை கடையில் சங்க செயலாளர் எம்.கோவிந்தராஜன் செவ்வாய்க்கிழமை இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார். பொங்கல் தொகுப்புடன் செங்கரும்பும் வழங்கப்பட்டது. பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியில் மேச்சேரி ஒன்றிய திமுக பொறுப்பாளர் சீனிவாச பெருமாள், ஊராட்சி செயலாளர்கள் ராஜா, சேகர், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் பிரபு, குட்டி, சுந்தரம், முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கடந்த நிதியாண்டில் பயணச் சீட்டு பரிசோதனை மூலம் ரூ. 7.24 கோடி அபராதம் வசூல்

சேலம் ரயில்வே கோட்டம் தகவல்

சேலம், ஜன. 4: சேலம் ரயில்வே கோட்டத்தில் பயணச்சீட்டு பரிசோதனை மூலம் கடந்த 2021 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான நிதியாண்டில் ரூ. 7.24 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

சேலம் ரயில்வே கோட்டம் சார்பில் முறைகேடுகளைக் கண்டறியும் வகையில் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தல், முறையற்ற பயணம், பதிவு செய்யப்படாத சரக்குகள், முகக் கவசம் அணியாமல் இருத்தல், எச்சில் துப்புதல் ஆகியவற்றைக் கண்டறிந்து அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2021 டிசம்பர் மாதம் நடத்திய சோதனையில் பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்ததாக 20,976 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ.1.21 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டது.

அதேபோல முன்பதிவு செய்யப்படாத உடைமைகள், அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான உடைமைகளை எடுத்துச் செல்லுதல் என 45 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ. 35,441 அபராதம் விதிக்கப்பட்டது.

கரோனா தொற்று பரவலைத் தடுக்கும் பொருட்டு, விதிகளை மீறி முகக் கவசம் அணியாமல் பயணித்த 360 பயணிகளிடம் இருந்து தலா ரூ. 500 அபராதம் விதிக்கப்பட்டு, மொத்தம் ரூ. 1.80 லட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டது. அதேபோல ரயில் நிலையங்களிலும், ரயில்களிலும் புகை பிடித்த பயணிகளிடம் ரூ. 3,300 அபராதம் விதிக்கப்பட்டது.

சேலம் ரயில்வே கோட்டம் சார்பில் கடந்த 2021 டிசம்பர் மாதம் மட்டும் 5,337 சோதனைகள் நடத்தப்பட்டன. இக்கால கட்டத்தில் ரூ.1.23 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டது. இந்த தொகை 2021 ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட தொகையில் மிக அதிகமாகும். கடந்த 2021 ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான நிதியாண்டில் ரூ. 7.24 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டது.

யூனியன் பாங்க் ஆப் இந்தியா, வேம்படிதாளம் கிளை
APPENDIX- II-A [See provison to rule 6 (2)]
4/108, இளம்பிள்ளை மெயின் ரோடு, வேம்படிதாளம் - 637504 போன்: 04294-242026, 9652879402

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை மறுசீரமைத்தல் சட்டம் 2002 (**Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002**) மற்றும் பிணைக்காப்பு நிதிச்சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002 (**Security Interest ((Enforcement) Rules, 2002**)-ன் கீழ் உள்ள விதி எண்.8(6)-ன் நிபந்தனைகளின் படி அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு, பொதுமக்களுக்கும் பொதுவாகவும், கடன்தாரர் மற்றும் பிணையாளர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் வங்கியில் அடமானம் கொடுக்கப்பட்டதும்/ஈடுசெய்யப்பட்டதும், **யூனியன் வங்கி, வேம்படிதாளம் கிளையின்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கபூர்வமாக கீழ்கண்ட தேதியில் சுவாதீனம் (Constructive Possession) ஆக்கப்பட்டதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கீழே குறிப்பிடப்பட்ட **கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானம்வைத்தவர்** ஆகியோரிடமிருந்து **யூனியன் வங்கி, வேம்படிதாளம் கிளைக்கு** வந்து சேரவேண்டிய கடன்பாக்கித்தொகை மற்றும் செலவினங்களுடன் சேர்த்து தொகையை வசூலிக்கும் பொருட்டு **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்கிற அடிப்படையில் **20.01.2022 தேதியில்** விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்த மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

ஏலத்தேதி மற்றும் நேரம்	20.01.2022 (வியாழக்கிழமை) மாலை 03.00 முதல் 05.00 மணிக்குள் மேலும் 10 நிமிடம் நீட்டிப்பு. அதாவது ஏலம் விடப்பட்ட பிறகு 10 நிமிடம் நீட்டிப்பு. அனைத்து ஏலதாரர்கள் ஏலத் தொகை கூறிய பின் 10 நிமிட இடைவெளியில் ஏலம் உறுதிசெய்யப்படும்.
ஏலத்தில் பங்கேற்க விண்ணப்பிக்க கடைசி தேதி	20.01.2022 (வியாழக்கிழமை) காலை 11.000 மணிக்கு முன்
ஏலதாரர்கள் ஏலம் கூற உயர்த்தும் தொகை	ரூ.1.00.000 (ரூபாய் ஒன்று இலட்சம் மட்டும்)

கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானம் வைத்தவர் பெயர் : 1) M/s கே.பி.எஸ். வீவிங், 2/147, கண்ணந்தேரி போஸ்ட், சங்ககிரி தாலுகா, சேலம்-637102. 2) திரு. எஸ்.சந்திரசேகரன் (பார்ட்னர்), த/பெ சித்தன், 2/147, கண்ணந்தேரி போஸ்ட், சங்ககிரி தாலுகா, சேலம்-637102. 3) திரு முருகன் (பார்ட்னர்), த/பெ சித்தன், 2/147, கண்ணந்தேரி போஸ்ட், சங்ககிரி தாலுகா, சேலம்-637102. 4) திரு. கே.பி.சித்தன் த/பெ பச்சமுத்து, 2/147, கண்ணந்தேரி போஸ்ட், சங்ககிரி தாலுகா, சேலம்-637102. 5) திருமதி எஸ்.பாப்பாள் என்கிற பழனியம்மாள், 2/147, கண்ணந்தேரி போஸ்ட், சங்ககிரி தாலுகா, சேலம்-637102. சொத்து கையகப்படுத்தப்பட்ட தேதி : 23.12.2020

அசையா சொத்து விபரம் : சொத்து எண் 1 : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி துணை பதிவு மாவட்டம், சங்ககிரி தாலுகா, கண்ணந்தேரி கிராமம், ச.எண்.24/13ஏ1, புஞ்சை ஹெக்டேர் 0.17.0 இது 4578 3/4 சதுர அடி மற்றும் ச.எண்.24/13பி, புஞ்சை ஹெக்டேர் 0.02.5, இது 172 ½ சதுர அடி, இரண்டு சேர்த்து 4751 1/4 இதன் எல்லைகள் பூராஜா மற்றும் வகையறா நிலத்துக்கு தெற்கில், காச்சுபள்ளி ரோட்டுக்கு மேற்கில், குப்புசாமி நிலத்துக்கு வடக்கில், ச.எண்.24/12 கே.பி.சித்தன் நிலத்துக்கு கிழக்கில், இந்த எல்லைக்குள், 1வது பகுதியின் அளவுகள் கிழமேல் 162 3/4' வடக்குபுறம், 162 1/4' தெற்குபுறம், தென்வடல் 32 3/4' கிழக்குபுறம், 22 3/4' மேற்குபுறம், மொத்தம் 4578 3/4 , 2வது பகுதியின் அளவுகள் கிழமேல் 5 1/4' இருபுறமும், தென்வடல் 33' கிழக்குபுறம், 32 3/4' மேற்குபுறம், மொத்தம் 172 ½ சதுர அடி. இரண்டு பகுதியும் சேர்த்து 4751 1/4 வீட்டுமனையின் அனைத்து பாத்திய உரிமையும் அடங்கும்.

சொத்து எண் 2 : 1வது அயிட்டம் (உரிமையாளர் ஸ்ரீ கே.பி.சித்தன்) சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி துணை பதிவு மாவட்டம், சங்ககிரி தாலுகா, கண்ணந்தேரி கிராமம், ச.எண்.24/14ஏ 10, புஞ்சை ஹெக்டேர் 0.01.5, இது 495 சதுர அடி நிலம் இதன் எல்லைகள் எம்.சின்னராஜா வீட்டுக்கு மேற்கில், மாணிக்கம் வீட்டுக்கு கிழக்கில், சந்திரசேகரன் மற்றும் முருகன் நிலத்துக்கு தெற்கில், இந்த எல்லைக்குள் தென்வடல் 45', கிழமேல் 12' வடக்குபுறம், 10' தெற்குபுறம், மொத்தம் 495 சதுர அடி. இத்துடன் நிலத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தின் அனைத்து இணைப்பு, பிணைப்பு மற்றும் பாத்திய உரிமைகள் அடங்கும். **2வது அயிட்டம் (உரிமையாளர் ஸ்ரீ கே.பி.சித்தன்)** சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி துணை பதிவு மாவட்டம், சங்ககிரி தாலுகா, கண்ணந்தேரி கிராமம், ச.எண்.24/12, புஞ்சை ஏக்கர் 0.26 1/4 இதன் எல்லைகள் ராஜா நிலத்துக்கு தெற்கில், ச.எண்.24,14ஏ1 சந்திரசேகரன், முருகன், கோவிந்தம்மாள் மற்றும் பெரியசாமி நிலத்துக்கு வடக்கில், சின்னமுத்து நிலம் மற்றும் நடைபாதைக்கு கிழக்கில், ச.எண்.24/13ஏ ராஜா மற்றும் குப்புசாமி நிலத்துக்கு மேற்கில், இந்த எல்லைக்குள் நிலத்தின் அளவுகள் 26 1/4 செண்ட் நிலமுடன் அதே இடத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தின் அனைத்து இணைப்பு, பிணைப்பு மற்றும் பாத்திய உரிமைகள் அடங்கும். 2வது பகுதி 1 ½ செண்ட் பொதுவான நடைபாதை எல்லைகள் சின்னமுத்து நிலத்துக்கு தெற்கில், ராமாய்யம்மாள், குப்புசாமி, பச்சமுத்து நிலத்துக்கு வடக்கில், ச.எண்.24/11ன் பொதுவான ரோட்டுக்கு கிழக்கில், 1வது பகுதி நிலத்துக்கு மேற்கில், இந்த எல்லைக்குள் பொது பாதி பாங்க 1 ½ செண்ட் நிலம். **3வது அயிட்டம் (உரிமையாளர் ஸ்ரீ சந்திரசேகரன் மற்றும் ஸ்ரீ முருகன்)** சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி துணை பதிவு மாவட்டம், சங்ககிரி தாலுகா, கண்ணந்தேரி கிராமம், ச.எண்.24/14ஏ1, புஞ்சை ஏக்கர் 0.32 இது 16 1/4 செண்ட் இதன் எல்லைகள் சந்திரசேகரன் மற்றும் முருகன் வகையறா நிலத்துக்கு கிழக்கில், சின்னராஜா, சொங்கோடன் மற்றும் தையலம்மாள் வீட்டுக்கு வடக்கில், குப்புசாமி அரிசி ஆலை நிலத்துக்கு கிழக்கில், ஹரிஷன் காலனிக்கு மேற்கில், இந்த எல்லைகளின் நிலத்தின் அளவுகள் 16 1/4 செண்ட், அதாவது 7078 ½ சதுர அடி நிலம் மற்றும் கட்டப்பட்ட கட்டிட நிலத்தின் அனைத்து இணைப்புகள், பிணைப்புகள், பாத்திய உரிமைகள் மற்றும் இந்த இடத்தின் கதவு எண்.2/146-1, **4வது அயிட்டம் (உரிமையாளர் ஸ்ரீ சந்திரசேகரன் மற்றும் ஸ்ரீ முருகன்)** சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி துணை பதிவு மாவட்டம், சங்ககிரி தாலுகா, கண்ணந்தேரி கிராமம், ச.எண்.24/14ஏ2, இது 2240 சதுர அடி இதன் எல்லைகள் கே.பி.சித்தன் வீட்டுக்கு தெற்கில், பெரியசாமி வீட்டுக்கு கிழக்கில், சந்திரசேகரன், முருகன் வகையறா நிலத்துக்கு மேற்கில், கே.பி.சித்தன் மற்றும் எம்.மாணிக்கம் நிலத்துக்கு வடக்கில், எல்லைகளின் படி அளவுகள் கிழமேல் 35 அடி, தென்வடல் 64 அடி, மொத்தம் 2240 சதுர அடி இத்துடன் கட்டப்பட்ட கட்டிட நிலத்தின் அனைத்து இணைப்புகள், பிணைப்புகள், பாத்திய உரிமைகள் மற்றும் இந்த இடத்தின் கதவு எண்.147.

கடன்பாக்கி தொகை மற்றும் வட்டி : 17.03.2020 வரை நிலுவையில் உள்ள **ரூ.2,08,60,767.81 (இரண்டு கோடியே எட்டு இலட்சத்து அறுபதாயிரத்து எழு நூற்று அறுபத்தி ஏழு ரூபாய் மற்றும் எண்பத்தி ஒன்று பைசா மட்டும்) + 18.03.2020 முதல் வட்டி மற்றும் செலவீனங்கள். சுவாதீன அறிவிப்பு தேதி 17.03.2020 சொத்தின் மதிப்பு : ரூ.1,13,00,000 (ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று இலட்சம் மட்டும்). முன்வைப்பு தொகை (EMD) : ரூ.11,30,000 (ரூபாய் பதினொன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்).**

வில்லங்க சான்றிதழ்படி வில்லங்கம் இல்லை. மேலும் இந்த ஏல அறிவிப்பு மற்றும் விதிமுறைகள் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் இணையதள முகவரியான **www.unionbankofindia.com** பார்த்து தெரிந்து கொள்ளவும்.

இடம் : வேம்படிதாளம்
நாள் : 28.12.2021

அங்கீகாரம் பெற்ற அதிகாரி, யூனியன்பாங்க் ஆப் இந்தியா,
வேம்படிதாளம் கிளை

யூனியன் பாங்க் ஆப் இந்தியா, ஆத்தூர் கிளை
APPENDIX- II-A [See provison to rule 6 (2)]
664/16, காமராஜனார் ரோடு, ராஜ்கிருஷ்ண ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், கடலூர் மெயின் ரோடு,
ஆத்தூர், சேலம்-636102 போன்: 04282-252025 Email: attur@unionbankofindia.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை மறுசீரமைத்தல் சட்டம் 2002 (**Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002**) மற்றும் பிணைக்காப்பு நிதிச்சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002 (**Security Interest ((Enforcement) Rules, 2002**)-ன் கீழ் உள்ள விதி எண்.8(6)-ன் நிபந்தனைகளின் படி அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு, பொதுமக்களுக்கும் பொதுவாகவும், கடன்தாரர் மற்றும் பிணையாளர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் வங்கியில் அடமானம் கொடுக்கப்பட்டதும்/ஈடுசெய்யப்பட்டதும், **யூனியன் வங்கி, ஆத்தூர் கிளையின்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கபூர்வமாக கீழ்கண்ட தேதியில் சுவாதீனம் (Constructive Possession) ஆக்கப்பட்டதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கீழே குறிப்பிடப்பட்ட **கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானம்வைத்தவர்** ஆகியோரிடமிருந்து **யூனியன் வங்கி, ஆத்தூர் கிளைக்கு** வந்து சேரவேண்டிய கடன்பாக்கித்தொகை மற்றும் செலவினங்களுடன் சேர்த்து தொகையை வசூலிக்கும் பொருட்டு **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்கிற அடிப்படையில் **20.01.2022 தேதியில்** விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்த மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

ஏலத்தேதி மற்றும் நேரம்	20.01.2022 (வியாழக்கிழமை) மாலை 03.00 முதல் 05.00 மணிக்குள் மேலும் 10 நிமிடம் நீட்டிப்பு. அதாவது ஏலம் விடப்பட்ட பிறகு 10 நிமிடம் நீட்டிப்பு. அனைத்து ஏலதாரர்கள் ஏலத் தொகை கூறிய பின் 10 நிமிட இடைவெளியில் ஏலம் உறுதிசெய்யப்படும்.
ஏலத்தில் பங்கேற்க விண்ணப்பிக்க கடைசி தேதி	20.01.2022 (வியாழக்கிழமை) காலை 11.000 மணிக்கு முன்
ஏலதாரர்கள் ஏலம் கூற உயர்த்தும் தொகை	ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)

கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானம்வைத்தவர் பெயர் : திரு பிரபு.என்.ஏ. புதிய எண்.3/181, தெற்கு தெரு, நாவலக்குறிச்சி(போஸ்ட்), ஆத்தூர், தமிழ்நாடு-636102. திரு. சின்னசாமி.கே.எஸ், த/பெ கோமாளி, 412, வடக்கு காட்டு கோட்டை, வரஹூர், ஆத்தூர் தாலுகா, தமிழ்நாடு-636112. திரு. அறிவழகன்.இ, த/பெ இருசப்பன், 1/58, வடக்கு தெரு, நாவலக்குறிச்சி போஸ்ட், ஆத்தூர் தாலுகா, சேலம் மாவட்டம், தமிழ்நாடு-636102. திரு. மாதேஸ்வரன்.ஏ, த/பெ அருணாசலம், 17-பி, காட்டுகோட்டைகள், சிறுவாச்சூர் (போஸ்ட்), ஆத்தூர் தாலுகா, தமிழ்நாடு-636112. திரு. குத்தப்பிள்ளை.ஏ, த/பெ அய்யாசாமி, 3/111பி, நாவலூர், ஆத்தூர், தமிழ்நாடு - 636102. திரு பாண்டியன்.எம், த/பெ மொட்டையன், 3/104, மேற்கு தெரு, நாவலக்குறிச்சி போஸ்ட், ஆத்தூர் தாலுகா, சேலம் மாவட்டம், தமிழ்நாடு-636102. திரு. கோவிந்தன்.வி, த/பெ வெள்ளையன், 2/235, வடக்கு தெரு, சிறுவாச்சூர் (போஸ்ட்), ஆத்தூர் தாலுகா, தமிழ்நாடு-636112. திருமதி சடையம்மாள், 8/23, காட்டு கோட்டை, சிறுவாச்சூர், ஆத்தூர், தமிழ்நாடு-636102. திரு. மாதவமணி.வி, த/பெ வெங்கடாசலம், 3/40, காட்டுகோட்டை, எழுப்பநத்தம், கங்கவள்ளி தாலுகா-636116. திருமதி அம்சவேணி.சி, க/பெ சித்தரசு, 45/70, முஸ்லீம் தெரு, புதுபேட்டை, ஆத்தூர், தமிழ்நாடு-636102. திருமதி ராதா.கே, க/பெ குமார், 3/181, தெற்கு தெரு, நவலக்குறிச்சி, ஆத்தூர், தமிழ்நாடு-636112. திருமதி தமிழரசி.பி, க/பெ பிரபு, 3/181, தெற்கு தெரு, நாவலக்குறிச்சி, ஆத்தூர் தாலுகா-636112. திருமதி அங்கம்மாள்.கே, க/பெ கூத்தபிள்ளை, 3/111பி, நாவலூர், ஆத்தூர், தமிழ்நாடு-636116. திரு கிருஷ்ணன்.பி, த/பெ பெருமாள், 8/24, காட்டுகோட்டை, சிறுவாச்சூர், ஆத்தூர், தமிழ்நாடு-636112. திரு செல்வமணி.வி, த/பெ வைத்தி, 1/52, வடக்கு தெரு, நாவலக்குறிச்சி, ஆத்தூர், தமிழ்நாடு-636112. திரு. கருப்பண்ணன்.எஸ், த/பெ சடையன், 15/2, காட்டுகோட்டை, சிறுவாச்சூர் போஸ்ட், ஆத்தூர், தமிழ்நாடு-636112. திருமதி ரங்கராஜி.ஆர், 13/22, தம்மம்பட்டி, காட்டுகோட்டை, காங்கவள்ளி தாலுகா, திரு குப்புசாமி.ஆர், த/பெ ராமசாமி, 3/90, மேலவீதி, அணயம்பட்டி, கங்கவள்ளி, தமிழ்நாடு-636116. திரு. ராஜேந்திரன்.கே, த/பெ கருப்பழகி கவுண்டர், தம்மம்பட்டி, கங்கவள்ளி, சேலம் மாவட்டம், தமிழ்நாடு-636116. திரு முத்துசாமி.கே, த/பெ கருப்பழகி கவுண்டர், தம்மம்பட்டி, கங்கவள்ளி, சேலம் மாவட்டம், தமிழ்நாடு-636116. திரு. ராமலிங்கம்.எம், 54பி, கெள்ளேரிபட்டி, தம்மம்பட்டி, கங்கவள்ளி, சேலம் மாவட்டம், தமிழ்நாடு-636113. திருமதி முத்தம்மாள்.எம், க/பெ முத்துசாமி, 234, வாழக்கொம்பை, ஜங்காமசமுத்திரம், ஆத்தூர் தாலுகா, சேலம் மாவட்டம்-636113. திரு. செல்வகுமார்.கே, த/பெ கருப்பண்ணன், 118, நடுவீதி, மல்லியக்கரை, ஆத்தூர் தாலுகா-636102. திரு. சுப்பிரமணி.சி, த/பெ சின்னப்பன், 168/2, பெரியார் தெரு, நரசிங்கபுரம் (போஸ்ட்), ஆத்தூர் தாலுகா-636108. திருமதி தேவி.எம், க/பெ மாதேஸ்வரன், 471, செட்டியார் தெரு, சிறுவாச்சூர் (போஸ்ட்), ஆத்தூர் தாலுகா-636112. திரு. அருணாசலம்.பி, 8/17 பி, அண்ணா நகர், சிறுவாச்சூர் போஸ்ட், ஆத்தூர் தாலுகா, சேலம் மாவட்டம் - 636112. திரு கரிகாலன்.எம், த/பெ மூர்த்தி, 3/8 உடையார்பாளையம், தம்மம்பட்டி போஸ்ட், சேலம் மாவட்டம்-636113. திரு பழனிமுத்து.என், 1-93-1/68, வடக்கு தெரு, நவலக்குறிச்சி போஸ்ட், சேலம் மாவட்டம்- 636112. திரு அன்பரசு.எம், 2/56, நடு தெரு, நாவலக்குறிச்சி, ஆத்தூர் தாலுகா, சேலம் மாவட்டம், தமிழ்நாடு-636112. திரு. வெங்கடேசன்.ஆர், த/பெ ரெங்கசாமி, 104, பெரியபுணல்வசை, ஆத்தூர் தாலுகா, சேலம் தமிழ்நாடு-636116. செல்வி திலகரசி.எம், 2/56, மிடில் தெரு, நவலக்குறிச்சி போஸ்ட், ஆத்தூர் தாலுகா, சேலம் தமிழ்நாடு - 636102. திருமதி சம்பூரணம்.பி, க/பெ பழனிமுத்து, 1-93-1/68, வடக்கு தெரு, நவலக்குறிச்சி போஸ்ட், சேலம் மாவட்டம்- 636112. திரு சிவா.சி த/பெ சின்னசாமி, 412, வடக்கு, காட்டு கோட்டை, வரகூர், ஆத்தூர் தாலுகா, சேலம் தமிழ்நாடு-636112. திரு தங்கராசு.எம், த/பெ முத்துசாமி, 1/323, காட்டுகோட்டை, நாவலக்குறிச்சி, ஆத்தூர் தாலுகா, சேலம் தமிழ்நாடு-636112. திரு. முத்துசாமி.ஆர், 4/423, வடக்கு தெரு, நவலக்குறிச்சி, ஆத்தூர் தாலுகா, சேலம் தமிழ்நாடு -636112. திரு நடராஜன்.பி, த/பெ பெருமாள், 3/109, தெற்கு தெரு, நாவலக்குறிச்சி, ஆத்தூர் தாலுகா, சேலம், தமிழ்நாடு-636102. செல்வி லட்சுமி.பி, த/பெ பெரியதம்பி, 382, நடு தெரு, கள்ளக்குறிச்சி தாலுகா, ஆத்தூர் தமிழ்நாடு-636102. திரு. ஆர்.முத்துசெழியன் த/பெ ராஜமாணிக்கம், 42, திருநாவுக்கரசு நகர், ஆத்தூர் தாலுகா, சேலம் - 636102. சொத்து கையகப்படுத்தப்பட்ட தேதி : 29.09.2021. சுவாதீன அறிவிப்பு தேதி : 17.04.2021

அசையா சொத்து விபரம் : சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், ஆத்தூர் துணை பதிவு மாவட்டம், ஆத்தூர் தாலுகா, நரசிங்கபுரம் கிராமம், 0.93 ஏக்கர் சர்வே எண்.144/2, 0.87 ஏக்கர் சர்வே எண்.144/3, 1.35 ஏக்கர் ச.எண்.144/4, 0.18 ஏக்கர் ச.எண்.144/5, 2.06 ஏக்கர் ச.எண்.145/4, 0.90 ஏக்கர் ச.எண்.145/5 வீட்டுமனைகளாக அமைக்கப்பட்டு அதன் பெயர் திருநாவுக்கரசு நகர், வார்டு எண்.7, மனை எண்.22, க.எண்.42/246, அளவுகள் கிழமேல் இருபுறமும் 40 அடி, தென்வடல் இருபுறமும் 60 அடி, மொத்தம் 2400 சதுர அடி. எல்லைகள் : கோபாலகிருஷ்ணன் மனை எண்.23க்கு கிழக்கில், மனை எண்.8க்கு தெற்கில், அப்துல் சாக்கூர் மனை எண்.21க்கு மேற்கில், 20 அடி அகல கிழமேல் பொது ரோட்டுக்கு வடக்கில், மேற்குறிப்பிட்ட மனை அமைந்துள்ள இடத்தின் ச.எண்.144/3, (துணை பிரிவு எண்.144/3ஏ), புதிய நத்தம் ச.எண். 551/17 இதன் அனைத்து பொதுவான பாதைகள் மற்றும் பாத்திய உரிமைகளும் அடங்கும். உரிமையாளர் திரு. முத்துசெழியன். த/பெ லேட் எல்.ராஜமாணிக்கம்.

சொத்தின் மதிப்பு : ரூ.68,90,000 (ரூபாய் அறுபத்தி எட்டு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்).

முன்வைப்பு தொகை (EMD) : ரூ.6,89,000 (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்).

கடன்பாக்கி தொகை மற்றும் வட்டி : 31.03.2021 வரை நிலுவையில் உள்ள **ரூ.1,02,64,198.00 (ஒரு கோடியே இரண்டு இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து நூற்று தொண்ணூற்றி எட்டு ரூபாய் மட்டும்) + 01.04.2021 முதல் வட்டி மற்றும் செலவீனங்கள்.**

வில்லங்க சான்றிதழ்படி வில்லங்கம் இல்லை. மேலும் இந்த ஏல அறிவிப்பு மற்றும் விதிமுறைகள் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் இணையதள முகவரியான **www.unionbankofindia.com** பார்த்து தெரிந்து கொள்ளவும்.

இடம் : ஆத்தூர்
நாள் : 29.12.2021

அங்கீகாரம் பெற்ற அதிகாரி, யூனியன்பாங்க் ஆப் இந்தியா,
ஆத்தூர் கிளை

கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட்
பதிவு அலுவலகம்: 27 BKC, C27, G பிளாக், பாந்த்ரா வளாகம், பாந்த்ரா (கி), மும்பை – 400051.
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட், கோடக் ஹவுஸ், 22, M.G. சாலை, பெங்களூரு–560001.

பிற்சேர்க்கை–IV-A
[பார்க்க விதி 8(6)]

ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 6(2) மற்றும் 8(6)–இன் விதிமுறைகளின்படியும் நடைபெற உள்ள அசையாச் சொத்துக்களுக்கான ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், **1. M/s. ஸ்ரீ புஸ்பம் டெக்ஸ்டைல் மில்,** எண் 33/35, பாலதண்டாயுதம் தெரு, ஈரோடு – 638002. **(கடன்தாரர்). 2. திருமதி ஸ்ரீவாணி,** எண் 33/35, பாலதண்டாயுதம் தெரு, ஈரோடு – 638002 **(கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர்). 3. திருமதி அம்ரிதா PMB,** எண் 108/4, காந்திஜி தெரு 2, அமராவதி நகர், கொல்லம்பாளையம், ஈரோடு – 638002 (கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர்). **4. திருமதி சசிகலா,** எண் 33/35, பாலதண்டாயுதம் தெரு, ஈரோடு – 638002 **(கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர்). 5. திரு. பாலசுப்பிரமணியம் PM,** எண் 78/1, வெங்கடேசபுரம், அஸ்தம்பட்டி, சேலம்–636007 **(கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர்). 6. திரு. மோகன்ராஜ் P,** எண் 33/35, பாலதண்டாயுதம் தெரு, ஈரோடு – 638002 **(கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர்). 7. திரு. அமித் குமார்,** எண் 33/35, பாலதண்டாயுதம் தெரு, ஈரோடு – 638002 **(கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர்)** ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ள **31.12.2021** நாள்படி நிலுவையிலுள்ளதும் செலுத்தப்பட வேண்டியதுமான **ரூ.7,51,71,987.91 (ரூபாய் ஏழு கோடியே ஐம்பத்தொரு இலட்சத்து எழுபத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தேழு மற்றும் பைசா தொண்ணூற்று ஒன்று மட்டும்)** தொகையை ஒப்பந்த விகிதப்படியான வட்டி, செலவினங்கள், கட்டணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்துத் திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் / **கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட்**) **கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட்டின்** அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் / சொத்து **"உள்ளது உள்ள இடத்தில்"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் 04.02.2022 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. அசையாச் சொத்துக்களின் / சொத்தின் சுருக்கமான விவரமானது தெரிந்த வில்லங்கங்கள் மற்றும் விற்பனை விதிமுறைகள் ஆகியவற்றுடன் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

கடன் கணக்கு எண்	கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்புத் தொகை மற்றும் நாள்	குறைந்தபட்ச விலை (RP)	டேவணித் தொகை (EMD) (குறைந்தபட்ச விலையில் 10%) மற்றும் கடைசி நாள்	ஆய்வு நாள் மற்றும் நேரம்	ஏல நாள் மற்றும் நேரம்	மொத்த நிலுவைத் தொகை	தெரிந்த வில்லங்கங்கள் ஏதும் இருப்பின்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)	(H)	(I)
LAP 17781810 & LAP 17783895 (CRN 67554933)	1. M/s. ஸ்ரீ புஸ்பம் டெக்ஸ்டைல் மில் (கடன்தாரர்), 2. திருமதி ஸ்ரீவாணி, 3. திருமதி அம்ரிதா PMB, 4. திருமதி சசிகலா 5. திரு. பாலசுப்பிரமணியம் PM, 6. திரு. மோகன்ராஜ் P, 7. திரு. அமித் குமார் (கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர்)	14.01.2020 – 14.01.2020 நாள்படி ரூ.6,69,26,507.89 (ரூபாய் ஆறு கோடியே அறுபத்தொன்பது இலட்சத்து இருபத்தாறாயிரத்து ஐந்நூற்று ஏழு மற்றும் பைசா எண்பத்தொன்பது மட்டும்)	ரூ.14,89,29,388/– (ரூபாய் பதினான்கு கோடியே எண்பத் தொன்பது இலட்சத்து இருபத் தொன்பதாயிரத்து முந்நூற்று எண்பத்தெட்டு மட்டும்)	ரூ.1,48,92,938 (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயித்து தொள்ளாயிரத்து முப்பத்தெட்டு மட்டும்) 31.01.2022 அன்று அல்லது அதற்கு முன்	21.01.2022 அன்று முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 03.30 மணி வரை	04.02.2022 அன்று பிற்பகல் 01.00 மணி முதல்	31.12.2021 நாள்படி ரூ.7,51,71,987.91 (ரூபாய் ஏழு கோடியே ஐம்பத்தொரு இலட்சத்து எழுபத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தேழு மற்றும் பைசா தொண்ணூற்று ஒன்று மட்டும்)	ஏதுமில்லை

அசையாச் சொத்துக்கள்/சொத்து விவரங்கள்

அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பின்வருமாறு:

இனம் – I: சேலம் மாவட்டம், சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், சேலம் சார்பதிவு மாவட்டம், சேலம் மாநகராட்சி, **F**–பிரிவு, 4ஆவது வார்டு, தாதுபாய் குட்டை, **DD** சாலை, பழைய **TS** எண் **8**, அரசு ஒப்படைப்புப்படி புதிய சர்வே வார்டு **J**, பிளாக் **2**, **TS** எண் **102** (புதிய **TS** எண் **102/1**), **TS** எண் **104** (புதிய **TS** எண் **104/1**). **தொடர்புடைய சொத்து பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: DD** சாலை மற்றும் பெரியசாமி, கிரகோரி, பாக்கியசாமி, ராதாகிருஷ்ணன் மற்றும் பழனி ஆகியோரின் சொத்துக்கு **வடக்கில்,** சதானந்தம், புவனேந்திரன், ராஜேந்திரன் ஆகியோரின் சொத்துக்குத் **தெற்கில், A.**ராஜமாணிக்கம் ஆசாரி அவர்களின் சொத்து மற்றும் **TK** பெரியசாமி விற்ற கட்டடத்திற்கு **மேற்கில்,** பாலசுப்பிரமணியம் அவர்களின் சொத்துக்குக் **கிழக்கில். அளவு:** தெற்கு வடக்காகக் கிழக்குப் பக்கம் நேராக வடக்கு நோக்கி – **50** அடி, நேராகக் கிழக்கு நோக்கி – **46** அடி, தெற்கு வடக்காக வடக்குப் பக்கம் – **54'6** அடி, தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் – **106** அடி, கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் – **62** அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் – **21** அடி, பரப்பளவு **4768** சதுர அடி. இதனுடன் இணைந்துள்ள அனைத்து வழக்கமான வழிப்பாதை உரிமைகள் மற்றும் புழக்க உரிமைகள் உட்பட.

இனம்–II: சேலம் மாவட்டம், சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், சேலம் சார்பதிவு மாவட்டம், சேலம் மாநகராட்சி, **F**–பிரிவு, 4ஆவது வார்டு, தாதுபாய் குட்டை, பழைய **TS** எண் **8**, அரசு ஒப்படைப்புப்படி சர்வே வார்டு **J**, பிளாக் **2**, **TS** எண் **102** (புதிய **TS** எண் **102/1**). **தொடர்புடைய சொத்து பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: DD** சாலைக்கு **வடக்கில்,** பாலசுப்பிரமணியம் அவர்களின் நிலத்துக்குக் **கிழக்கில்,** திரு. மாரிமுத்து முதலியார் அவர்களின் சொத்துக்கு **மேற்கில்,** சதானந்தம், புவனேந்திரன், ராஜேந்திரன் ஆகியோரின் கட்டடத்திற்குத் **தெற்கில். அளவுகள் பின்வருமாறு:** கிழக்கு மேற்காகத் தெற்கு மற்றும் வடக்குப் பக்கம் – **15** அடி, தெற்கு வடக்காகக் கிழக்கு மற்றும் மேற்குப் பக்கம் – **105** அடி, பரப்பளவு **1575** சதுர அடி நிலம். இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து வழக்கமான வழி உரிமைகள் மற்றும் புழக்க உரிமைகள் உட்பட.

இனம்–III: சேலம் மாவட்டம், சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், சேலம் சார்பதிவு மாவட்டம், சேலம் மாநகராட்சி, **F**–பிரிவு, 4ஆவது வார்டு, தாதுபாய் குட்டை, பழைய **TS** எண் **8**, அரசு ஒப்படைப்புப்படி சர்வே வார்டு **J**, பிளாக் **2**, **TS** எண் **102** (புதிய **TS** எண் **102/1**). **தொடர்புடைய சொத்து பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: DD** சாலைக்கு **வடக்கில்,** வையாபுரி முதலியார் அவர்களின் நிலத்துக்குக் **கிழக்கில்,** திரு.பாலசுப்பிரமணியம் அவர்களின் நிலத்துக்கு **மேற்கில்,** சதானந்தம், புவனேந்திரன், ராஜேந்திரன் ஆகியோரின் கட்டடத்திற்குத் **தெற்கில். அளவுகள் பின்வருமாறு:** கிழக்கு மேற்காகத் தெற்கு மற்றும் வடக்குப் பக்கம் – **15** அடி, தெற்கு வடக்காகக் கிழக்கு மற்றும் மேற்குப் பக்கம் – **105** அடி. பரப்பளவு **1575** சதுர அடி நிலம். இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து வழக்கமான வழி உரிமைகள் மற்றும் புழக்க உரிமைகள் உட்பட.

இனம்–IV: சேலம் மாவட்டம், சேலம் சார்பதிவு மாவட்டம், சேலம் மாநகராட்சி, **F**–பிரிவு, 4ஆவது வார்டு, தாதுபாய் குட்டை, பழைய **TS** எண் **8**, அரசு ஒப்படைப்புப்படி சர்வே வார்டு **J**, பிளாக் **2**, புதிய **TS** எண் **102** (புதிய **TS** எண் **102/1**). தொடர்புடைய சொத்து பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: **DD** சாலைக்கு **வடக்கில், OK** என்ஜினியரிங், முகமது பாய் அவர்களின் கட்டடத்திற்குக் **கிழக்கில்,** திரு. பாலசுப்பிரமணியம் அவர்களின் நிலத்துக்கு **மேற்கில்,** சதானந்தம், புவனேந்திரன், ராஜேந்திரன் ஆகியோரின் கட்டடத்திற்குத் **தெற்கில். அளவுகள் பின்வருமாறு:** கிழக்கு மேற்காகத் தெற்கு மற்றும் வடக்குப் பக்கம் – **15** அடி, தெற்கு வடக்காகக் கிழக்குப் பக்கம் – **105** அடி, மேற்குப் பக்கம் – **106** அடி, பரப்பளவு **1590** சதுர அடி நிலம். இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து வழக்கமான வழி உரிமைகள் மற்றும் புழக்க உரிமைகள் உட்பட.

அனைத்தும் சேர்த்து மொத்தப் பரப்பளவு **9508** சதுர அடி நிலம் மற்றும் அங்குள்ள கட்டடம் உட்பட. இத்துடன் கதவுகள், ஜன்னல்கள், மின்சாரச் சேவை இணைப்பு, நீர் சேவை இணைப்பு, பொருத்தல்கள், முன்வைப்புகள் மற்றும் பிற துணைப்பகுதிகள், வழக்கமான வழி மீதான பொது உரிமை உட்பட.

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. விற்பனையானது கீழ்க்காணும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் ஆர்வமுள்ள ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்பட உள்ள விலைகோரல் / ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கடுமையாகக் கட்டுப்பட்டது. **2.** அசையாச் சொத்துக்கள் / சொத்து **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படையில் தெரிந்த வில்லங்கங்கள் ஏதும் இருப்பின் அவற்றுடனே விற்பனை செய்யப்படும். ஏலம் விடப்பட உள்ள அசையாச் சொத்துக்களை / சொத்தை **21.01.2022 அன்று முற்பகல் 11.30 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும்** இடையில் ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஏல விண்ணப்பப் படிவம் குறித்தும் டேவணித்தொகை **(EMD)** சமர்ப்பித்தல் தொடர்பாகவும் கேள்விகள் அல்லது சந்தேகங்கள் ஏதும் இருப்பின் தயவு செய்து **கோடக் மஹிந்திரா வங்கி லிமிட்டெட்டின்** அதிகாரப்பூர்வ அலுவலரைத் தொடர்பு கொள்ளுங்கள் (தொடர்பு விவரங்கள் உட்பிரிவு **(4)**–இல் குறிப்பிடப்பட்டுள்ளன). ஏலத்தை நடத்துவதில் ஏதேனும் தொழில்நுட்பத் தடங்கலோ பிழையோ நேரிட்டால் ஏலமானது கிளையளவில் நடத்தப்படும். எனினும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றம் செய்ய அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழுமையான விருப்புரிமை உண்டு. **3.** சந்தைப்படுத்தலுக்கும் ஆர்வமுள்ள ஏலதாரர்களை / வாங்குநர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் நாங்கள் உள்ளூர் அளவில் சந்தைப்படுத்தல் முகமையையும் / சேவை வழங்குநர்களையும் நியமித்துள்ளோம். இவர்கள் **SARFAESI** சட்டப்படி ஏல நடைமுறையை நிறைவு செய்வதிலும் எங்களுக்கு உதவுவார்கள். **4.** ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் / விலைகோருநர்கள் / ஆர்வமுள்ள ஏலதாரர்கள் / வாங்குநர்கள் தங்கள் விலைகோரலை பத்தி **(E)**–இல் குறிப்பிட்டுள்ளபடி டேவணித்தொகையைக் **(EMD)** கேட்பு வரைவோலை **(DD)** அல்லது செலுத்தாணை **(PO)** வடிவில் கோடக் **மஹிந்திரா வங்கி லிமிடெட் பெயருக்குச் சென்னையில் மாற்றத்தக்க** வகையில் இணைத்து மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு **"Offer for purchase of the Immovable Properties/Property/Property of "1. M/s. SRI PUSSPAM TEXTILE MILL, 2. Mrs. SRIVANI, 3. Mrs. AMRITHAA PMB, 4. Mrs. SASIKALA, 5. Mr. BALASUBRAMANIAM PM, 6.Mr. MOHANRAJ P, 7. Mr. AMITH KUMAR"** என மேலெழுதி அதிகாரப்பூர்வ அலுவலர், **கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட், 5ஆவது தளம், சாம்சன் டவர்ஸ், 402 L, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை – 600008** எனும் முகவரியில் எமது அதிகாரப்பூர்வ அலுவலரான திரு. சேஷஸ்ரீவாசன், கைப்பேசி – (+919916855444) / அல்லது அலுவலர் திரு. சிவகுமார் கைப்பேசி – +919843012371) அவர்களுக்கு ஏலப்புள்ளி **சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளன்று – அதாவது 31.01.2022 அன்று மாலை 05.00 மணி –** அல்லது அதற்கு முன்னர் வந்து சேரும்படி சமர்ப்பிக்க வேண்டும். வெற்றி பெறும் ஏலதாரரால் செலுத்தப்பட்ட டேவணித்தொகை விற்பனை விலையில் சரிகட்டப்படும். **5.** முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத அல்லது குறைந்தபட்ச விலைக்குக் குறைவான அல்லது டேவணித்தொகை இணைக்கப்படாத அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள நாளுக்கும் நேரத்துக்கும் பின்னர் பெறப்படுகிற விலைகோரல்கள் தகுதியில்லாதவையாகக் கருதப்பட்டுத் தள்ளுபடி செய்யப்படும். டேவணித்தொகைக்கு வட்டி ஏதும் இல்லை. **6.** ஏலம் விடப்படும் சொத்துக்கள் மீதான அடமானம், பற்று, வில்லங்கம் அல்லது அரசுக்கோ வேறு யாருக்குமோ செலுத்த வேண்டிய இதர நிலுவைகள் ஏதும் இருப்பின் அதற்கு அதிகாரப்பூர்வ அலுவலரோ வங்கியோ பொறுப்பில்லை. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர் சட்டப்படியான பொறுப்புக்கூறல்கள், சொத்து வரி – மின் கட்டணம் முதலான பாக்கிகள் உட்பட சொத்து மீதான எல்லா வில்லங்கங்களைப் பற்றியும் தானே தனிப்பட்ட முறையில் விசாரித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **7.** ஆர்வமுள்ள ஏலதாரர் விலைகோரல் ஆவணத்துடன் வருமான வரித்துறையால் வழங்கப்பட்ட நிரந்தரக் கணக்கு எண் **(PAN)** அட்டை நகலையும் (அல்லது படிவ எண் **60**) ஆதார் அட்டை, கடவுச்சீட்டு, வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுநர் உரிமம் முதலானவற்றில் உரியவற்றையும் தனது அடையாளச் சான்றாகவும் குடியிருப்புச் சான்றாகவும் இணைக்க வேண்டும். **8.** அசையாச் சொத்துக்கள் / சொத்து உச்சபட்ச ஏலதாரருக்கே / விலைகோருநருக்கே விற்பனை செய்யப்படும். எனினும் ஏலப்புள்ளியானது ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் / கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட்டுடைய அதிகாரப்பூர்வ அலுவலரின் உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டது. அட்டவணையின் பத்தி **"G"**–இல் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் மேற்படி அசையாச் சொத்துக்களுக்கான / சொத்துக்கான இணைய வழி ஏலம் / உள் ஏலம் நடத்தப்படும். **9.** நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கக் கட்டணங்கள், மின் கட்டணம் மற்றும் குடிநீர் வரிகள் அல்லது மேற்படி அசையாச் சொத்துக்கள் / சொத்து மீதான அனைத்து மிகைக்கடன்கள் உட்பட இதர நிலுவைகள் ஏதும் இருப்பின் அவற்றையும் சேர்த்து எல்லா நிலுவைகளும் செலவுகளும் வெற்றி பெறும் ஏலதாரர்களாலேயே / வாங்குநர்களாலேயே செலுத்தப்பட வேண்டும். **10.** வெற்றி பெற்ற ஏலதாரர் / வாங்குநர் விற்பனை விலையின் **25%** தொகையை (டேவணித் தொகை உட்பட) விற்பனையின்பொழுது அதிகாரப்பூர்வ அலுவலர் விலைகோரலை ஏற்றதும் உடனடியாகச் செலுத்த வேண்டும். தவறினால் டேவணித்தொகை பறிமுதல் செய்யப்படும். **11.** விற்பனை விலையின் மீதமுள்ள **75%** தொகையானது விற்பனை உறுதி செய்யப்பட்ட தகவல் அதிகாரப்பூர்வ அலுவலரால் வெற்றி பெற்ற வாங்குநருக்குத் தெரிவிக்கப்பட்டதிலிருந்து **15** நாட்களுக்குள் அல்லது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் **2002**, விதி **9**–இன்படி முழுக்க முழுக்க ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் விருப்புரிமையின் பேரில் எழுத்துப்பூர்வமாக ஒப்புதலளிக்கப்பட்ட காலநீட்டிப்புக்குள் செலுத்தப்பட வேண்டும். விற்பனை விலையின் மீதமுள்ள **75%** தொகை அல்லது அதன் பகுதி உரிய காலக்கட்டத்துக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கெனவே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும். மேலும் இதன் மூலம் அசையாச் சொத்துக்களை / சொத்தை மீண்டும் ஒருமுறை விற்பனை செய்யவும் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்கு உரிமை ஏற்படுவதோடு தவறிழைத்த வாங்குநருக்கு அசையாச் சொத்துக்கள் / சொத்து மீதுள்ள எல்லா உரிமைகளும் பறிமுதல் செய்யப்படும் அல்லது சொத்தை வாங்குவதற்காகச் செலுத்தப்பட்ட தொகையின் ஒரு பகுதியும் பறிமுதல் செய்யப்படும். **12.** கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரப்பூர்வ அலுவலரால் விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து மேற்படி அசையாச் சொத்துக்கள் / சொத்து எல்லா வகையிலும் வெற்றி பெற்ற வாங்குநரின் முழுப் பொறுப்புக்கு உட்பட்டது. தீ அல்லது திருட்டு அல்லது இதர விபத்துகள் மற்றும் இது போல் வேறு என்ன நடந்தாலும் அதனால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம் ஆகியவை அவரையே சாரும். இயற்கையான எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும் விற்பனையை ரத்துச் செய்ய வெற்றி பெற்ற ஏலதாரருக்கு உரிமை இல்லை. **13.** சொத்துக்களின் இறுதி ஏலத் தொகை / விற்பனை விலை **ரூ.50.00** இலட்சம் அல்லது அதற்கு மேலானால் கடன்தாரரின் நிரந்தரக் கணக்கு எண்ணைக் **(PAN)** கொடுத்து விற்பனை விலையிலிருந்து வழங்குமிடத்துப் பிடித்த வரியாக **(TDS)** ஏலத்தொகையில் **1%** தொகைக்குக் கழிவு பெற்றுச் செலுத்தலாம். கழித்துக் கொள்ளப்படும் தொகையை அதிகாரப்பூர்வ அலுவலரிடமிருந்து / வங்கியிடமிருந்து ஏலம் முடிந்த பிறகு பெற்றுக் கொண்டு விற்பனை விலையில் மீதமுள்ள **99%** தொகையை உரிய காலக்கட்டத்துக்குள் வங்கிக்குச் செலுத்தலாம். ஆக, வருமான வரிச் சட்டம் **1961**, பிரிவு **(194–IA)**–இன்படி வெற்றி பெற்ற உச்சபட்ச ஏலதாரர் கடன்தாரரின் நிரந்தரக் கணக்கு எண்ணைக் கொடுத்து மறுசுவாதீனச் சொத்தை வாங்கும் வகையில் **1%** தொகையை வழங்குமிடத்துப் பிடித்த வரியாகச் செலுத்தக் கட்டுப்பட்டவராவார். **14.** இவ்வாறு ஏலத்தில் **ரூ.50.00** இலட்சம் அல்லது அதற்கு மேலான தொகைக்குச் சொத்தின் விற்பனை விலை உயரும் சூழலில் வெற்றி பெற்ற ஏலதாரர் / வாங்குநர் மேற்கண்டவாறு (வழங்குமிடத்துப் பிடித்த வரி போக) விற்பனை விலை முழுவதையும் செலுத்தி விற்பனை நடைமுறைகள் நிறைவடைந்த பின்னர் வழங்குமிடத்துப் பிடித்த வரி செலுத்தப்பட்டதற்கான படிவ எண் **26QB** வடிவிலான சலானுடன் கூடிய ஆவணத்தைப் பெற்றுக் கொண்டு அசையாச் சொத்துக்களுக்கான / சொத்துக்கான விற்பனைச் சான்றிதழானது **SARFAESI** சட்டம் மற்றும் விதிகள் **2002**–இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவில் வழங்கப்படும். அதையடுத்துப் படிவம் **16B** வடிவிலான வழங்குமிடத்துப் பிடித்த வரிச் சான்றிதழ் வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். **15.** விற்பனைச் சான்றிதழைப் பதிவு செய்து கொள்வது வெற்றி பெற்ற ஏலதாரரின் தனிப்பட்ட பொறுப்புக்கு உட்பட்டது. முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், பெயர் மாற்றக் கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் உட்பட எல்லாச் செலவுகள் மற்றும் மேற்படி அசையாச் சொத்துக்கள் / சொத்து தொடர்பான **SARFAESI** சட்டம் மற்றும் விதிகள் **2002**–இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவிலான விற்பனைச் சான்றிதழைப் பதிவு செய்வதற்கான கட்டணங்கள் அனைத்தும் வெற்றி பெற்ற ஏலதாரரையே / வாங்குநரையே சாரும். பெயர் மாற்றம் தொடர்பான மாநிலச் சட்டத்துக்கேற்ப / விதிகளுக்கேற்ப விரைவில் விற்பனைச் சான்றிதழ் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும். தவறினால் வாங்குநரானவர் தாமதத்துக்கான காரணத்தைக் குறிப்பிட்டு ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் கோரிக்கைக் கடிதம் அளிக்க வேண்டும். **16.** அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உச்சபட்ச விலைகோரலையோ எந்த விலைகோரலையுமோ அனைத்து விலைகோரல்களையுமோ ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை. மேலும் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எனும் முறையில் எந்தக் காரணமும் தெரிவிக்காமல் எந்த ஏலப்புள்ளியையும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் தள்ளுபடி செய்யக் கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட்டுக்கு உரிமை உண்டு. ஒருவேளை ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டால் அசையாச் சொத்துக்களை / சொத்தைத் தனிப்பட்ட முறையில் விற்பனை செய்ய எந்த ஒப்பந்தப்புள்ளிதாரருடனோ ஆர்வமுள்ள ஏலதாரருடனோ இதர தரப்பினருடனோ அதிகாரப்பூர்வ அலுவலர் பேரம் பேசலாம். விற்பனையானது திருத்தப்பட்ட கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் **2002**–இன்படி ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் / கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அலுவலரின் உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டது. **17.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் / விலைகோருநர்கள் அல்லது இவர்களின் முறையான அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் தவிர வேறு யாரும் ஏலத்தில் / விற்பனை நடைமுறையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். விற்பனைச் சான்றிதழானது ஏல விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பெயரிலான வாங்குநரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்படும். **18.** இந்த விற்பனை அறிவிப்பின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எதையும் முன்னறிவிப்பின்றித் தன் விருப்புரிமையின் பேரில் மாற்றவும் மேற்கண்ட மறுசுவாதீனத்துக்குரிய அடமான அசையாச் சொத்துக்களை / சொத்தை விற்பனை செய்வதில் சந்தைப்படுத்தல் முகமை அல்லது சேவை வழங்குநரின் கட்டணச் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளவும் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமை உண்டு. இந்தக் கட்டணம் கடன்தாரரிடம் வசூல் செய்யப்படும். **19.** வங்கியின் நிலுவைகள் முழுவதுமாக ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்கு வர வேண்டிய அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றுடன் விற்பனை நாள் அன்று அல்லது அதற்கு முன் எந்த நேரத்திலும் மேற்கூறிய பெயர் கொண்ட கடன்தாரரால் / கூட்டுக் கடன்தாரர்களால் / ஜாமீன்தாரர்களால் செலுத்தப்பட்டு விட்டால் அசையாச் சொத்துக்கள் / சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது. ஆர்வமுள்ள ஏலதாரர்களால் செலுத்தப்பட்ட அனைத்து ஏலப்புள்ளிகளும் **கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட்டின்** பெயருக்கு எந்தப் பொறுப்புக்கூறலும் / உரிமைகோரலும் இன்றித் திருப்பித் தரப்படும். **20.** இந்த வெளியீடானது நிலுவைத்தொகைகள் முழுமையாகத் திருப்பிச் செலுத்தப்படாவிட்டால் மேற்குறிப்பிட்ட நாளில் விற்பனை நடைபெறும் என்பது குறித்த கடன்தாரர்களுக்கான / அடமானதாரர்களுக்கான **30** நாள் அறிவிப்பும் ஆகும். **21.** ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களைக் கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட்டின் உள்ளூர்க் கிளையில் பெற்றுக் கொள்ளலாம். விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்: **https://www.kotak.com/en/bank–auctions.html. 22.** கடன்தாரர்களுக்கு / அடமானதாரர்களுக்கு இதன் மூலம் மேலும் தெரிவிப்பது யாதெனில், **கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட்டின்** கட்டுப்பாட்டில் உள்ள மேற்படி அடமானச் சொத்துக்களின் / சொத்தின் உள்ளே தங்கள் தனிப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் / சாதனங்கள் ஏதும் இருப்பின் அவற்றைக் **கோடக் மஹிந்திரா வங்கி லிட்**–க்கு முன்னறிவிப்புச் செய்து விட்டு இந்த வெளியீட்டு நாளிலிருந்து **30** நாட்களுக்குள் எடுத்துச் சென்று விட வேண்டும். தவறினால் கோடக் மஹிந்திரா வங்கி லிட்., அவற்றுக்குப் பொறுப்பாகாது என்பதோடு அவை கடன்தாரர்களின் / ஜாமீன்தாரர்களின் பொறுப்பில் அப்புறப்படுத்தப்படும்.

சிறப்பு வழிகாட்டல்: கடைசி நேரத்தில் ஏலம் கேட்பதை ஏலதாரர்கள் தாங்களாகவே தவிர்த்துக் கொள்வது நல்லது. எந்தத் தடங்கலுக்கும் / செயலிழப்புக்கும் **கோடக் மஹிந்திரா வங்கி லிட்.,** பொறுப்பேற்க இயலாது. அது போன்ற எதிர்பாரா இடையூறுகளிலிருந்து தற்காத்துக் கொள்ள சேம வழங்கி **(back–up)** முதலான தேவையான எல்லா முன்னேற்பாடுகளையும் / மாற்று ஏற்பாடுகளையும் செய்து கொள்ளுமாறு ஏலதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அதன் மூலம் எதிர்பாராத தடங்கல்களைத் தவிர்த்து ஏலத்தில் வெற்றிகரமாகக் கலந்து கொள்ளலாம். ஏல விற்பனையானது பத்தி எண் **G**–இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏல விற்பனை நேரக்கெடு முடிந்ததும் தானாகவே நிறைவடையும். அதிகாரப்பூர்வ அலுவலர் தன் விருப்புரிமையைப் பயன்படுத்தி ஏல விற்பனையை 15 நிமிடங்களுக்கு நீட்டிக்கலாம்.

இடம்: சேலம், நாள்: 05.01.2022

ஒ/ம்– அதிகாரப்பூர்வ அலுவலர், கோடக் மஹிந்திரா வங்கி லிட். சார்பில்.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 116.22 அடி

மேட்டூர், ஜன. 4: மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 116.22 அடியாக உயர்ந்தது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 1000 கன அடி வீதமும், கிழக்கு-மேற்கு கால்வாய்ப் பாசனத்துக்கு 600 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து 3,988 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர் இருப்பு 87.56 டி.எம்.சி.யாக உள்ளது.

வாழப்பாடி பகுதியில் 65 ரேஷன் கடைகளை அடைத்து பணியாளர்கள் போராட்டம்

வாழப்பாடி, ஜன. 4: சேலம் மாவட்டம், வாழப்பாடியில் பொங்கல் தொகுப்பு டோக்கன்களை கூடுதலாக கேட்டு திமுகவைச் சேர்ந்த சிலர் அவதூறாகப் பேசியதாகக் கூறி, 65 ரேஷன்கடைகளை அடைத்து பணியாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழப்பாடி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு உள்பட்ட ரேஷன் கடைப் பணியாளர்களிடம், திமுகவைச் சேர்ந்த சிலர், கூடுதலாக டோக்கன் கேட்டு அவதூறாகப் பேசியதாகக் கூறப்படுகிறது. இதற்கு முன்பாகவும் இதே நபர்கள் மிரட்டியதாகக் குற்றச்சாட்டு தெரிவித்த பணியாளர்கள், 65 ரேஷன் கடைகளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் அடைத்து திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், திமுக நிர்வாகி எனக் கூறிய சிலர் மீது ரேஷன்கடை பணியாளர்கள், வாழப்பாடி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

வரி விளம்பரம்

மருத்துவம்

மாரடைப்பு பைபாஸ் சர்ஜரி, ஆஞ்சியோ கிராம், ஆஞ்சியோ பிளாஸ்டி இவற்றை தவிர்க்க அணுகவும், இருதய மற்றும் நீரழிவு நோய் நிபுணர்

இருதயம்ஸ்
மருத்துவமனை (பி) லிட்
இந்து கல்லூரி அருகில்,
நாகர்கோவில்-2.
போன். 04652-241561
செல் 9842141561

தினமணி
INDIAN EXPRESS
[illegible]

நாமக்கல்	-	7598282809
சேலம்	-	9840961904
ஓசூர்	-	9655434424
கிருஷ்ணகிரி	-	9840961918
தருமபுரி	-	7811091914